மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

O.S.No. 1/2018

2018 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை திருமதி.எஸ்.இந்துலதா,பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

வா சா. 2

| | |
|---|---|
| பெயர் ஜெயபால் | |
| த/பெ. பழனிச்சாமி | |
| க/பெ. | சமயம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

முதல் விசாரணை

நான் எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டு படித்துப் பார்க்கப்பட்டு அது உண்மை என்று உறுதி கூறி கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்பதை நான் பிரமாணமாயும் உறுதியாயும் கூறுகிறேன்.

என்னுடைய ஆதார் அட்டையின் ஒளி நகல் வா.சா.ஆ.9 ஆகக் குறியீடு செய்கிறேன். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.)

குறுக்கு விசாரணை

எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். இந்த வழக்கை யார் எதற்காக தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் கிறிஸ்துவ மேரி, உலகரட்சகன், திருத்துவராஜ், கேத்ரின் மேரி ஆகியோர் வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர். யார் இறந்தததாக வாரிசு சான்றிதழ் கேட்டுள்ளனர் என்றால் சவுரியார். சவுரியார் எப்படி தெரியும் என்றால் என்னுடைய தோட்டத்தில் குடியிருந்தவர். எந்த வருடம் குடியிருந்தார் என்றால் 2000 லிருந்து 2004 வரை குடியிருந்தனர். 2004 ல் சவுரியார் இறந்துவிட்டார். அதன்பிறகு அவருடைய பையன்கள் குடியிருந்தனர். அவர் இறக்கும்போது என்னுடைய தோட்டத்தில் தான் இருந்தார் என்றால் சரிதான். அவர் இறப்புக்கு நான் போயிருக்கிறேன். கைக்கோளர் தோட்டம், மலையம்பாளையம் என்னுடைய தோட்டத்தின் முகவரி. சவுரியாரின் அப்பா

Sd/-ஜெயபால்

பெயர் என்ன என்றால் ஆரோக்கியசாமி. எந்த வயதில் இறந்தார் என்றால் சுமார் 60, 65 இருக்கலாம். உடல்நிலை சரியில்லாமல் இறந்தாரா என்றால் நெஞ்சுவலி வந்து இறந்தார். நான் பொய் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றாலும், அவர் என்னுடைய தோட்டத்தில் குடியிருந்ததால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இறந்துபோனவருக்கு சொத்து உள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. சொல்லியிருக்கிறார்கள்.

Sd/-ஜெயபால்

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-S.Indulatha,24.8.2018
மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்